
# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 12 வெள்ளிக்கிழமை 26.05.2025 கதிர் 206



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel







## யாழ். இந்தியத் துணைத் தூதரக அதிகாரி ஓமந்தை விபத்தில் பரிதாப உயிரிழப்பு!

### மனைவி, மகன், மாமனார் படுகாயம்

வவுனியா, மே 26

வவுனியா, ஓமந்தைப் பகுதியில் இன்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் கணவன் உயிரிழந்துள்ளதுடன் மனைவி, மகன் மற்றும் மாமனார் ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்தில், யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரக அதிகாரி பிரம்மஸ்ரீ சச்சிதானந்தக் குருக்கள் பிரபாகரன்

7

# தொகுதி அமைப்பாளர்களின் விலகலால் ஐக்கிய மக்கள் சக்திக்குப் பாதிப்பு இல்லை

## கட்சியின் பொதுச்செயலாளர் கூறுகின்றார்



கொழும்பு, மே 26

"ஐக்கிய மக்கள் சக்தி கட்சிக்கு நாடு முழுவதிலும் தொகுதி அமைப்பாளர்கள் உள்ளனர். அவர்களில் ஒருசிலரின் பதவி விலகலால் கட்சிக்கு எந்தப் பாதிப்பும் இல்லை." - என்று ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்குக் கிடைத்த போனஸ் ஆசனங்களைப் பகிர்வதில் ஏற்பட்ட மனவிரக்தியில் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களில் ஒருசிலர் பதவி விலகியுள்ளனர். இந்தப் பிரச்சினை ஏனைய கட்சிகளிலும் ஏற்படும். எனவே, ஒருசிலரின் பதவி விலகலால் கட்சிக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. இந்தப் பிரச்சினைக்குக் கட்சியின் தலைமை தீர்வு காணும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது." - என்றார்.

## மஹிந்தானந்தவுக்குப் பிணை



கொழும்பு, மே 26

முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவைப் பிணையில் விடுதலை செய்ய கொழும்பு நீதிவான் நீதிமன்றம் இன்று திங்கட்கிழமை காலை

7

## கூடிய ஆசனங்களைப் பெற்ற கட்சிகளுக[redacted] முதல்வர், தவிசாளர் தெரிவுகளில் [redacted]தரவு

### தமிழ்த் தேசியப் பேரவை அறிவிப்பு



யாழ்ப்பாணம், மே 26

"தமிழர் தாயகத்தில் உள்ளூராட்சி மன்றங்களில் கூடிய ஆசனங்களைப் பெற்ற அல்லது சமமான ஆசனங்களைப் பெற்றிருப்பின் கூடுதல் வாக்குகளைப் பெற்ற தமிழ்த் தேசியக்

7

## மேர்வின், பிரசன்னவுக்கு விளக்கமறியல் நீடிப்பு!

கொழும்பு, மே 26

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா மற்றும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர ஆகியோர் உட்பட ஐவரை எதிர்வரும் ஜூன் மாதம் 9ஆம் திகதி

7





## ஓட்டமாவடியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் வாகரையில் மோ. சைக்கிள் விபத்தில் பலி!

மட்டக்களப்பு, மே 26

மட்டக்களப்பு மாவட்டம், வாகரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனிச்சங்கேணி பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஓட்டமாவடியைச் சேர்ந்த இளைஞர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மூன்று மோட்டார் சைக்கிளில் 6 நண்பர்கள் கிண்ணியாவுக்குச் சென்றுவிட்டு ஓட்டமாவடி பகுதியை நோக்கி வந்தபோது ஒரு மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கியுள்ளது. இதன்போது அதில் பயணித்த இளைஞர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள்



- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# காராத்தே போட்டியில் எம்.எஃப். ஸைனப் வெற்றி



கொழும்பு, மே .26

சர்வதேச தற்காப்புக் கலைசங்கம் - இலங்கைகிளை (International Martial Arts Association-Sri Lanka Branch) யினால் நடத்தப்பட்ட 3 வது திறந்த சர்வதேச கராத்தே சாம்பியன்ஷிப்- 2025 (3rd Open international Karate Championship-2025) யானது சனிக்கிழமை (24) அன்று இலங்கை தென்கிழக்கு கிழக்கு பல்கலைக்கழக பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. குறித்த போட்டியில் இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழக கலை,கலாசார பீடத்தின் (புவியியல் துறைவிசேட) மூன்றாம் ஆண்டு மாணவியான எம்.எஃப். ஸைனப், பங்கேற்று சீனியர் கட்டா பெண் நிலை முதலாம் பிரிவில் 1 வது இடத்தையும், சீனியர் குமிட் பெண் பிரிவில் 2 வது இடத்தையும் பெற்றார். (ஐ)

# தேசிய வைத்தியசாலையில் தொடரும் பணிப்பாளர் வெற்றிடம்




கொழும்பு, மே .26

இலங்கையின் மிகப்பெரிய வைத்தியசாலை கொழும்பு தேசிய வைத்தியசாலை கடந்த இரண்டு மாதங்களாக பணிப்பாளர் இல்லாமல் இயங்கி வருவதாக மருத்துவமனை மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் பணிப்பாளர், அமைச்சகத்தின் மேலதிக செயலாளராக பதவி உயர்வு பெற்ற பின்னர், சுகாதார அமைச்சகத்தில் பணியமர்த்தப்பட்டதால், இரண்டு மாதங்களுக்கு முன்பு ஒரு பிரதிப் பணிப்பாளர் நியமிக்கப்பட்டார்.

நிரந்தர பணிப்பாளர் இல்லாததால் மருத்துவமனையின் சில பிரிவுகளில் பிரச்சினைகள் எழுந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மருத்துவமனையில் சுமார் 1500 மருத்துவர்களும் 200 நிபுணர்களும் பணிபுரிவதாகக் கூறப்படுகிறது.அதேவேளை மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 25,000 ஆகும். (ஐ)

# சுதந்திர சதுக்கத்தைச் சுற்றி விஷேட போக்குவரத்து திட்டம்



கொழும்பு, மே .26

மறைந்த பிரபல நடிகை மாலினி பொன்சேகாவின் இறுதிச் சடங்கு ஏற்பாடுகள் காரணமாக

கொழும்பு சுதந்திர சதுக்கத்தை அண்மித்த பகுதியில் இன்று (26) சிறப்பு பாதுகாப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இன்று காலை 7:00 மணி முதல் மாலை 7:00 மணி வரை பாதுகாப்பு நடவடிக்கைகள் அமலில் இருக்கும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், கொழும்பு சுதந்திர சதுக்கத்தைச் சுற்றியுள்ள பகுதியில் ஒரு சிறப்பு போக்குவரத்துத் திட்டமும் செயல்படுத்தப்பட்டுள்ளது.



# சட்டத்தரணிகளுக்கு விசேட அறிவுறுத்தல்




கொழும்பு, மே .26

சட்டத்தரணிகள் தங்களின் தொழில்முறை கடமைகளை எந்தவித அச்சமோ அல்லது தடையோ இல்லாமல் நிறைவேற்ற முடியும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் (டீயுளுடு) தெரிவித்துள்ளது.

சட்ட அமுலாக்க முகவர் மற்றும் வழக்குத் தொடுக்கும் அதிகாரிகள், வழக்கறிஞர்கள் வசம் உள்ள தகவல்களை அணுக முயன்ற பல நிகழ்வுகள் உள்ளன என்று ஊடக அறிக்கை ஒன்றில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தங்கள் வாடிக்கையாளர்களின் சட்டப்பூர்வ அறிவுறுத்தல்களின்படி, செயல்படும் சட்ட பயிற்சியாளர்கள்ரகசியத்தன்மையின்தொழில்முறை கடமைகளால் பிணைக்கப்பட்டுள்ளனர் என்றும், உச்ச நீதிமன்ற விதிகள் மற்றும் சாட்சியக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கடமைகள் உறுதியாக நிறுவப்பட்டுள்ளன என்றும் டீயுளுடு கூறியது, இது வாடிக்கையாளர்களின் ஒப்புதலுடன் அல்லது சட்டத்தால் வெளிப்படையாகத் தேவைப்படுவதைத் தவிர சலுகை பெற்ற தகவல்தொடர்புகளை வெளியிடுவதைத் தடை செய்கிறது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அறிக்கையின் முழு உரை,

“சமீப காலங்களில், சட்ட அமலாக்க முகவர்களும் சட்டத்தரணிகளும் வழக்கறிஞர்களின் வசம் உள்ள தகவல்களை அணுக முயன்ற பல நிகழ்வுகளின் அறிக்கைகளை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் பெற்றுள்ளது.

சட்ட பயிற்சியாளர்கள் தங்கள் வாடிக்கையாளர்களின் சட்டப்பூர்வமான அறிவுறுத்தல்களின்படி செயல்படுகிறார்கள் மற்றும் இரகசியத்தன்மையின் தொழில்முறை கடமைகளுக்குக் கட்டுப்படுகிறார்கள் என்பதை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்துகிறது.

இந்தக் கடமைகள் உயர்நீதிமன்ற விதிகள் மற்றும் சாட்சியக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உறுதியாக நிறுவப்பட்டுள்ளன. இது வாடிக்கையாளர்களின் சம்மதத்துடன் அல்லது சட்டத்தால் வெளிப்படையாகத் தேவைப்படுவதைத் தவிர சலுகை பெற்ற தகவல்தொடர்புகளை வெளியிடுவதைத் தடை செய்கிறது.

சட்ட அமலாக்க முகவர்களும் சட்டத்தரணிகளும் தங்கள் தொழில்முறை கடமைகளை நிறைவேற்றுவது தொடர்பாக எழும் விடயங்கள் குறித்து அறிக்கைகளை வெளியிட சட்டத்தரணிகளை அழைப்பது பொருத்தமற்றது என்று டீயுளுடு கருதுகிறது. இத்தகைய நடவடிக்கைகள் நெறிமுறை தரங்களை மீறுவதற்கும் சட்டத் தொழிலின் சுதந்திரத்தை சமரசம் செய்வதற்கும் ஆபத்தை விளைவிக்கும்.

நீதி நிர்வாக அமைப்பில் சட்டத்தரணிகளின் பங்கைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் இத்தகைய செயல்களில் இருந்து விலகுமாறு அத்தகைய அனைத்து அதிகாரிகளையும் நிறுவனங்களையும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்துகிறது.

இந்த வகையான தலையீடு சட்டத்தின் ஆட்சி மற்றும் அரசியலமைப்பின் பிரிவு 14(1)(ப) இன் கீழ் அனைத்து குடிமக்களுக்கும் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள அரசியலமைப்பு பாதுகாப்புகளை அச்சுறுத்துகிறது,

இதில் சட்டத்திரணிகளும் அடங்குவர்.

சட்டப்பூர்வ சகோதரத்துவத்தின் உறுப்பினர்கள் உயர்நீதிமன்ற விதிகள் உட்பட சட்டத்தின் விதிகளுக்கு உட்பட்டு எந்த பயமும் அல்லது வரம்பும் இல்லாமல் தங்கள் தொழில்முறை கடமைகளை நிறைவேற்ற முடியும் என்பதை டீயுளுடு மீண்டும் வலியுறுத்துகிறது, இது நீதி வழங்கலில் ஒரு சுதந்திரமான மற்றும் நியாயமான அமைப்பைப் பராமரிக்க ஒரு அத்தியாவசிய அங்கமாகும்.

சட்டத்தரணிர்கள் ஒரு வாடிக்கையாளருக்கு தங்கள் தொழில்முறை கடமைகளைச் செய்வதற்கு விதிக்கப்படும் எந்தவொரு வரம்பும், குடிமக்கள் நீதியை முறையாக அணுகுவதற்கான உரிமையைக் குறைக்கும் என்பதை டீயுளுடு மேலும் வலியுறுத்துகிறது, இது நாட்டின் நீதி அமைப்பில் இன்றியமையாத ஒரு அங்கமாகும்.

சட்ட வல்லுநர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைப் பாதுகாப்பதற்கும், இலங்கையில் சட்டத் தொழிலின் தொடர்ச்சியான சுதந்திரம், ஒருமைப்பாடு மற்றும் கண்ணியத்தை நிலைநிறுத்துவதற்கும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உறுதியாக உள்ளது. (ஐ)

## யாழில் ஒரே சூழில் ஐந்து குழந்தைகள்

*யாழ்ப்பாணம், மே 26*

*யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒரே சூழில் 5 குழந்தைகளைத் தாயார் ஒருவர் பிரசவித்துள்ளார்.*

*இந்தக் குழந்தைகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிறந்துள்ளன.*

*யாழ். வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தம்பதியினருக்கே ஒரே சூழில் ஐந்து குழந்தைகள் பிறந்துள்ளன.*

*3 ஆண்குழந்தைகளையும், 2 பெண் குழந்தைகளையும் அந்தத் தாயார் பிரசவித்துள்ளார்.*

*தாயும் ஐந்து குழந்தைகளும் ஆரோக்கியமாக உள்ளார்கள் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.*

## யாழில் சட்டவிரோதமாக மாடுகளை கடத்திய ஐவர் கைது



*யாழ்ப்பாணத்தில் (துயககயெ) சட்டவிரோதமாக மாடு கடத்தலில் ஈடுபட்ட சந்தேகநபர் ஐவர் நேற்றையதினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*அனுமதிப்பத்திரம் இன்றி ஏழு மாடுகளை வாகனம் ஒன்றில் ஏற்றிச் சென்றபோது காரைநகர் பகுதியில் வைத்து இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.*

*ஊர்காவற்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி விதான பத்திரனவின் கீழ் இயங்கும் பொலிஸ் குழுவினரால் இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.*

*கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவர்களை ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)*

## புகையிரத கடவையை கடக்க முயன்ற இளம் குடும்பஸ்தர் பலி





கிளிநொச்சி, மே .26

கிளிநொச்சியில் புகையிரத கடவையில் பொருத்தப்பட்டுள்ள சமிக்கை இயங்கிய போதும் சமிக்கை ஒலியை பொருப்படுத்தாமல் புகையிரத கடவையை கடக்க முயன்றவர் உயிரிழந்துள்ளார்.

விபத்தினால் ரயில் சேவை சில மணி நேரம் பாதிக்கப்பட்டது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அறிவியல் நகர் செல்லும் வீதியில்

பாரதிபுரம் பகுதியில் அமைந்துள்ள புகையிரத கடவையை மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் கடக்க முற்பட்ட போது,

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிபயணித்த அதிசொகுசு புகையிரதத்தில் ஞாயிற்றுக்கிழமை (25) அன்று மோதி உயிரிழந்துள்ளார்

குறித்த விபத்தில் பொன்னழகு அனுசன் ராஜ் 28 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்து தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகிறார்கள்.

# ‘பாகிஸ்தானுக்கு சரியான பாடம் கற்பிக்கப்பட்டது’: காங்கிரஸ் எம்.பி., சசி தரூர்



“பாகிஸ்தானில் இருந்தபடி, யார் வேண்டுமானாலும் இந்தியாவுக்குள் நுழைந்து மக்களை கொல்லலாம் என்ற எண்ணம் கொண்ட அந்நாட்டுக்கு, தகுந்த பாடம் கற்பிக்கப்பட்டு விட்டது,” என, காங்கிரஸ் எம்.பி., சசி தரூர் அமெரிக்காவில் கூறினார். பாகிஸ்தானின் பயங்கரவாத ஆதரவு நிலையை உலக நாடுகளுக்கு அம்பலப்படுத்துவதற்காக அனைத்து கட்சிகளையும் சேர்ந்த எம்.பி.,க்கள் அடங்கிய குழுவினர் பல்வேறு நாடுகளுக்கு சென்று, அங்குள்ள தலைவர்களுக்கு விளக்கி வருகின்றனர்.

காங்கிரஸ் எம்.பி., சசி தரூர் தலைமையிலான குழு கயானா, பனாமா, கொலம்பியா, பிரேசில் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. நேற்று முன்தினம் அமெரிக்கா சென்ற அந்த குழுவின் தலைவரான சசி தரூர், அங்கு வசிக்கும் இந்தியர்களிடையே பேசியதாவது:

பாகிஸ்தான் பயங்கரவாதிகளுக்கு தகுந்த பாடம் கற்பித்து விட்டோம். பாகிஸ்தானில் இருந்தபடி, யார் வேண்டுமானாலும் இந்தியாவுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தி, தப்பிச் செல்லலாம் என்ற நிலைப்பாட்டுக்கு தக்க பதிலடி கொடுத்துஉள்ளோம்.

பயங்கரவாதிகள் துவக்கினர் நாம் பதிலடி கொடுத்தோம். அவர்கள் நிறுத்தினர் நாமும் நிறுத்தி விட்டோம். அதுதான், 88 மணி நேர போர். இவ்வாறு அவர் பேசினார்.

இதேபோல், ரஷ்யாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட தி.மு.க., - எம்.பி., கனிமொழி தலைமையிலான அனைத்து கட்சி குழு, அந்நாட்டின் பார்லிமென்ட் உறுப்பினர்கள், அதிகாரிகள் குழுவை மே 23ல் சந்தித்து, இந்தியாவின் கருத்தை வலியுறுத்தியது.

அதற்கு மறுநாள், 24ம் திகதி, அந்நாட்டின் அறிஞர்கள் மற்றும் இரு நாடுகளின் உறவு குறித்த வல்லுநர்களை சந்தித்து, இந்தியாவின் நிலைப்பாட்டை தெரிவித்தது.

இதையடுத்து, ‘இந்திய குழுவின் ரஷ்ய சுற்றுப்பயணத்தால், இரு நாடுகளுக்கும் இடையேயான உறவில் புதிய அத்தியாயம் ஏற்பட்டுள்ளது’ என, மாஸ்கோவில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது. (ஐ)

## மும்பையில் பல இடங்களில் வெள்ள நீர் சூழ்ந்தது: மக்கள் உஷாராக இருக்க உத்தரவு




மும்பையில் பல இடங்களில் பெய்த கன மழை காரணமாக வெள்ள நீர் சூழ்ந்தது. மக்கள் உஷாராக இருக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. ரயில்கள் தாமதமாக இயக்கப்பட்டு வருகின்றன. விமான சேவைகள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளன.

கேரளா, மும்பை, மஹாராஷ்டிரா, தெற்கு ஜார்க்கண்ட், உத்தரபிரதேசம் மற்றும் மேகாலயா ஆகிய இடங்களில் அடுத்த 3 மணி நேரத்திற்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது என இந்திய வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கல்யாண் நோக்கிச் செல்லும் மெதுவான ரயில்கள் ஐந்து நிமிடங்கள் தாமதமாகவும், சத்ரபதி சிவாஜி மகாராஜ் டெர்மினஸ்/க்குச் செல்லும் விரைவு ரயில்கள் சுமார் பத்து நிமிடங்கள் தாமதமாகவும் இயக்கப்பட்டன. நேற்று இரவு மும்பையில் பெய்த கனமழையால் பல பகுதிகளில் தண்ணீர் தேங்கியது.

60 கி.மீ., வேகத்தில் காற்று வீசும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது. மும்பை மக்கள் உஷாராக இருக்க உத்தரவிடப்பட்டு உள்ளது. மும்பையில் பல்வேறு இடங்களில் அடுத்த மூன்று மணி நேரத்திற்கு பலத்த மழை பெய்யும் என்பதால் மஞ்சள் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது.

மேற்கு மஹாராஷ்டிராவில், புனே, கோலாப்பூர், சதாரா மற்றும் அகமதுநகர் ஆகிய மாவட்டங்களில் பலத்த மழை பெய்யும் என்று எச்சரிக்கப்பட்டு உள்ளது. மே 26ம் தேதி ரோஸி, மும்பை, தானே, ராய்காட் மற்றும் பால்கர் மாவட்டங்களில் பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது.

மஹாராஷ்டிராவில் பருவமழை முன்பே துவங்கி விட்டதால், மும்பையில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பயங்கரவாதத்தை ஆதரிக்கும் நாடு பிச்சை தான் எடுக்கும்: இப்ராஹிம்



“பயங்கரவாதத்தை ஆதரிக்கும் எந்த நாடும், சோற்றுக்கு பிச்சை எடுக்கும் என்பதற்கு, பாகிஸ்தான் மிகப்பெரிய உதாரணம்,” என, மதுரையில் பா.ஜ., சிறுபான்மைப்பிரிவு தேசிய செயலர் வேலூர் இப்ராஹிம் குற்றம் சாட்டினார்.

திருப்பரங்குன்றத்தில் நடக்கும் ஆப்பரேஷன் சிந்துார் பேரணி, மொழி, இனம், மதம் கடந்து, பாகிஸ்தான், சீனா மட்டுமின்றி, நம் தேசத்திற்குள் இருக்கும் பயங்கரவாத சக்திகளையும் துணிவோடு எதிர்ப்போம் என்பதை காட்டுவதாக உள்ளது. சிந்து நதி நீரை திறக்கும்படி, இந்தியாவிடம் பாகிஸ்தான் மண்டியிடுகிறது.

பயங்கரவாதத்தை ஆதரிக்கும் எந்த ஒரு நாடும், சோற்றுக்கு பிச்சை எடுக்கும் நிலை வந்துவிடும் என்பதற்கு அந்நாடே உதாரணம்.

தி.மு.க., - எம்.பி., கனிமொழியை உலக நாடுகளுக்கு அனுப்பி, தேசப் பெருமையை பேச வைத்துள்ளார் மோடி. ஆனால், சிந்துார் பேரணியில் நான் பங்கேற்கக் கூடாது என, போலீசார் நெருக்கடி கொடுக்கின்றனர்.

வெளிநாடுகளில் ஒரு வேடம், தமிழகத்தில் ஒரு வேடம் என செயல்படும் தி.மு.க.,வை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். தி.மு.க., முற்றிலும் துடைத்து எறியப்படும்.

எல்லா விஷயங்களிலும் பா.ஜ., நேர்மையாக செயல்படுகிறது. அதே நேரம், தி.மு.க., எல்லா விஷயங்களிலும் இரட்டை வேடம் போடுகிறது. தமிழக நலனுக்காக பிரதமரை சந்திக்க நேரம் கேட்ட முதல்வர் ஸ்டாலினுக்கு உடனடியாக நேரம் கொடுத்ததன் வாயிலாக, பிரதமர் மோடி தமிழக நலனில் அக்கறையோடு இருக்கிறார் என்பதை நாட்டு மக்கள் புரிந்து கொண்டுள்ளனர்.

இவ்வாறு, அவர் கூறினார். (ஐ)

## குஜராத்தில் ரயில் இன்ஜின் தயாரிப்பு ஆலையை திறந்து வைத்தார் பிரதமர் மோடி




குஜராத்தில் ரயில் இன்ஜின் தயாரிப்பு ஆலையை திறந்து வைத்த பிரதமர் மோடி, அங்கு தயாரிக்கப்பட்ட முதல் எலக்ட்ரிக் ரயில் இன்ஜின் சேவையையும் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

2 நாள் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் பிரதமர் மோடி, ரூ.82,950 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்டப் பணிகளை தொடங்கி வைக்கிறார். இதற்காக, அங்கு சென்றுள்ள அவர் வதோதராவில் ரோடு ஷோ நிகழ்த்தினார். அப்போது, சாலையின் இருபக்கங்களிலும் பா.ஜ., தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் திரண்டு நின்று உற்சாக வரவேற்பு அளித்தனர். அப்போது, கைகளில் தேசிய கொடியை ஏந்தியவாறு, பிரதமர் மீது பூக்களை தூவி தொண்டர்கள் வரவேற்றனர்.

பின்னர், தாஹோத் மாவட்டத்திற்கு சென்ற பிரதமர் மோடி, அங்கு இந்திய ரயில்வே துறையின், இன்ஜின் தயாரிப்பு ஆலையை திறந்து வைத்தார். மேலும், அந்த ஆலையில் தயாரிக்கப்பட்ட 9 ஆயிரம் ஹெச்.பி. திறன் கொண்ட எலக்ட்ரிக் ரயில் இன்ஜின் சேவையையும் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த எலக்ட்ரி ரயில் இன்ஜின்களானது, இந்திய ரயில்வே துறையில் சரக்கு போக்குவரத்தில் முக்கிய பங்காற்றும்.

தொடர்ந்து, கட்ச் மாவட்டத்தில் உள்ள புஜ் பகுதிக்கு செல்லும் பிரதமர் மோடி, அங்கு, ரூ.53,414 கோடி மதிப்பிலான 33 வளர்ச்சி திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். இந்தத் திட்டங்களின் மூலம், குட்ச், ஜாம்நகர், அம்ரேலி, ஜூனாகத், சோம்நாத், அஹமதாபாத், மஹிசாகர் உள்ளிட்ட பகுதி மக்கள் பயனடைய உள்ளனர்.

நாளை காந்திநகரில் உள்ள மஹாத்மா மந்தீரில் ரூ.5,536 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். மேலும் பிரதான் மந்திரி அவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் ரூ.1,006 கோடியில் கட்டப்பட்ட 22,000 குடியிருப்புகளை பிரதமர் மோடி தொடங்கி வைக்க உள்ளார். காந்திநகரில் உள்ள யூ.என்., மேக்தா இருதயவியல் கல்வி நிறுவனத்தையும் திறந்து வைக்கிறார். இதேபோல, பல திட்டங்களை பிரதமர் மோடி திறந்து வைக்க உள்ளார். (ஐ)



# மீசை: ஆதிக்கத்தின் ஒரு குறியீடு!

நாகஜோதி

நம் சமூகத்தில் மூக்கின் கீழ் வளரும் ரோமத்திற்கு இருக்கும் மதிப்பும் மரியாதையும் அதிகம். ஆனால் அந்த மீசைக்கு அத்தனை மதிப்பளிப்பது அவசியமா என சிந்தித்தால், 'இல்லை' என்பதே பதிலாக வரும்.

காரணம் மீசை என்பது வளரிளம் பருவத்தில் டெஸ்டோஸ்டிரோன் என்ற ஹார்மோன் தூண்டப்பட்டு ஆண்களின் அக்குள், மார்பு மற்றும் அந்தரங்க உறுப்புகளில் வளரும் ரோமம் போன்று முகத்தில் வளரும் ரோமம். இது ஒரு சாதாரண பருவ வயது மாற்றம், அவ்வளவுதான்.

மீசைக்கு நம் சமூகத்தில் இப்போது இத்தனை மதிப்பு இருந்தாலும், தமிழர்களின் பண்டைய பண்பட்ட நாகரீகத்தை பதிவு செய்துள்ள சங்க இலக்கியங்களில் மீசை எனும் சொல் காணக் கிடைக்கவில்லை. தமிழ்ச் சொற்களின் வேர், வரலாறு, இலக்கணம், இலக்கியம், கல்வெட்டு, நாட்டுப்புறச் சொற்கள், திராவிட மொழிகள், உலக மொழிகள் ஆகியவற்றை விளக்கும் நூலான 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி'யில் மேலேஃ மேலிடம் என பொருள்படும் 'மிசை' என்கிற சொல்லில் இருந்துதான் 'மீசை' எனும் சொல் வந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.





அது மட்டுமல்லாமல், கம்பராமாயணத்தில் (மாரீசன் படலம் 49) 'துடித்த தொடர்மீசைகள் சுறுக்கொள' எனும் வரியும் வருகிறது. மீசை எனும் சொல் திராவிட மொழிகளான மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளில் முறையே மீஷா, மீசெ, மீசமு என்று சொல்லப்படுகிறது.

நம் சமூகத்தில் மீசையின் மீது கட்டமைக்கப்பட்டுள்ள கற்பிதங்கள் ஏராளம், உதாரணமாக நாம் அடிக்கடி திரைப்படங்களிலும் சாதாரண பேச்சு வழக்கிலும் கேட்கும், "நீ மீசை வைச்ச ஆம்பளையா இருந்தா" என்ற வாக்கியத்தை எடுத்துக்கொள்வோம். இதற்குப் பொருள், 'நீ தைரியமான ஆணாக இருந்தால்' என்பதுதான். முதலில் தைரியமாக இருப்பது ஆண்களுக்கு மட்டுமே உரிய பண்பு என நினைப்பதே அபத்தம். அப்படியிருக்க தைரியமாக இருப்பதற்கும் மீசைக்கும் சம்பந்தம் இருப்பதாக நினைத்து, காலம் காலமாக இந்த வாக்கியத்தை பயன்படுத்துவது, எவ்வளவு பெரிய அபத்தம் என சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

பெண்களும் தைரியமாக இருக்கிறார்கள், ஆனால் பெண்களுக்கு மீசை இல்லை. சில விதிவிலக்குகள் உண்டு (கேரளா மாநிலம் கண்ணூரை சேர்ந்த ஷைஜா என்ற பெண் அடர்த்தியான முறுக்கு மீசையுடன் இருக்கும் புகைப்படம் சமூக வலைதளங்களில் வலம் வந்தது குறிப்பிடத்தக்கது).

தைரியமான ஆண்கள் சிலருக்கும் மீசை இல்லை என்பதை வரலாறு நெடுக நம்மால் பார்க்க முடிகிறது. அப்படியானால் தைரியமாக இருப்பதற்கும் மீசைக்கும் சம்பந்தம் இல்லை, பிறகு ஏன் இந்த ஒப்பீடு?

இதற்கான பதிலை தேடிச் சென்றால், சில நூற்றாண்டுகள் பின்னோக்கி பயணிக்க வேண்டியுள்ளது. 18ஆம் நூற்றாண்டில் ஹங்கேரி நாட்டின் குதிரைப் படை வீரர்கள், மீசை வைத்துக்கொள்வதை பெருமிதமாகக் கருதியுள்ளனர். இதற்குக் காரணம் போரின்போது எதிரிப் படையினர் மீசையுடன் இருக்கும் இவர்களைக் கண்டு அஞ்சுவதே என சொல்லப்பட்டது, இதே போல ஐரோப்பா மற்றும் பிரித்தானியா நாட்டு குதிரைப் படை வீரர்களும் மீசை வைப்பதை பெருமையாக நினைத்ததாக சொல்லப்படுகிறது. இதற்குக் காரணம் அக்காலத்தில் மீசை என்பது ஒரு படை வீரனுக்கும் அந்நாட்டின் சாதாரண குடிமகனுக்கும் இடையேயான வேறுபாடாகக் கருதப்பட்டது.

நம் நாட்டில் எடுத்துப் பார்த்தாலும், அரசர்கள், போர் வீரர்கள் யாராயினும் அவர்களின் மீசைதான் முதலில் நம் நினைவுக்கு வருகிறது. அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு வீரபாண்டிய கட்டபொம்மன். 'கட்டபொம்மன்' எனச் சொல்லும்போதே அவரின் மீசைதான் நம் நினைவுக்கு வரும். இதுபோல ஊமைத்துரை, ஒண்டிவீரன், கருப்பசேர்வை, பூலித்தேவன், மருது சகோதரர்கள், தீரன் சின்னமலை என இன்னும் எத்தனையோ விடுதலைப் போராட்ட வீரர்களின் முகங்களை நினைவு கூரும்போது, முதலில் நினைவுக்கு வருவது அவர்களின் மீசை. புகைப்படத் தொழில்நுட்பம் இல்லாத காலகட்டத்தில், சில நூற்றாண்டுகளுக்கு முன்பாக வரையப்பட்டு தற்போது காலம் தாண்டி நிற்கும் இந்த வீரர்களின் ஓவியங்கள் அனைத்தும், 'வீரம்' என்பதை மீசையுடன் தொடர்புபடுத்திய, சில நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த நம் முந்தைய தலைமுறை ஓவியர்கள் வரைந்தவையே.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக தஞ்சை பெருவுடையார் கோயிலுக்குள் வரையப்பட்ட சோழப் பேரரசர் ராஜராஜனின் ஓவியத்தில்கூட அவருக்கு மீசை, தாடி, கொண்டை காணப்படுகிறது. ராசேந்திர சோழன் வடித்த தந்தை ராஜராஜனின் சிற்பங்கள்கூட மீசை தாடியுடன் காட்சி தருகின்றன. ஆனால் மீசையை 'ஆண்மை', 'வீரம்' போன்ற கருத்தாக்கங்களுடன் அப்போது யாரும் பொருத்திப் பார்க்கவில்லை. இந்த நடைமுறை விஜயநகர ஆட்சியான நாயக்கர் காலத்தில் மாறியது எனலாம். பிற்கால நாயக்கர் கால சிற்பங்கள், ஓவியங்கள் அவற்றில் மன்னர்கள், வீரர்களை மீசை உடையவர்களாகக் காட்டியுள்ளனர். பிற்கால தஞ்சை மராட்டிய மன்னர்கள் ஓவியங்கள், சிவகங்கை, ராமநாதபுரம் அரசர்களின் ஓவியங்கள் என 17ஆம் நூற்றாண்டுக்குப் பிந்தைய வீரர்கள், அரசர்கள் பெரும் மீசையுடன் காட்டப்பட்டனர். அவர்கள் அவ்வாறு இருந்திருக்கவேண்டும், கலைஞர்களும் தங்கள் படைப்புகளில் அவ்வாறு அவர்களைக் காட்டியிருக்கவேண்டும். ஏறத்தாழ ஐரோப்பாவிலும், இங்கும் ஒரே காலகட்டத்தில்தான் வீரம், ஆண்மை என்பதை எல்லாம் மீசையுடன் பொருத்திப் பார்க்கும் பாங்கு வந்தது எனலாம். இது வெறும் படைவீரர்களுக்கும் அரசர்களுக்கும் போராளிகளுக்கும் மட்டும்தான் பொருந்துகிறதா எனப் பார்த்தால் இல்லை. பாரதியார் பல கவிகள் பாடியிருந்தாலும் முதலில் நம் நினைவிற்கு வருவது அவரின் மீசை. அவ்வளவு ஏன்? உலகப் பொதுமறை தந்த திருவள்ளுவர்கூட பெரிய மீசையுடன் இருப்பதாகத்தான் பிற்காலத்தில் வரையப்பட்டுள்ளது. இது போல இன்னும் பல எடுத்துக்காட்டுகள் நம் கண் முன்னே இருக்கின்றன. காலப் போக்கில் இவர்களின் வீரத்துக்கும் ஆளுமைக்கும் மீசைக்கும் ஏதோ சம்பந்தம் இருப்பது போன்ற தோற்றம் ஏற்பட்டதுதான் துரதிர்ஷ்டவசமானது. சரி, மீசை வைத்திருந்தவர்கள் மட்டும்தான் வரலாற்று நாயகர்களாக இருந்தார்களா எனப் பார்த்தால் அப்படியும் இல்லை. சுபாஷ் சந்திர போஸ், திருப்பூர் குமரன் போன்ற பல வீரர்களும் மீசை இல்லாதவர்கள்தான். இந்த காலகட்டத்தில் புகைப்படக் கலை வளர்ந்ததால், 'உள்ளதை உள்ளபடி காட்டும்' நிலையும் ஏற்பட்டது, கலைஞர்களின் கற்பனை, கற்பிதம் எடுபடவில்லை.

அதே போல மீசை இல்லாத பெண்கள் பலர் போர்க்களம் சென்று வீரமாக போர் புரிந்துள்ளனர். சான்றாக வீரமங்கை வேலுநாச்சியார், எதிரிகளை உலக்கையால் அடித்து அழித்த 'ஒனெக்' ஒபாவ்வா, கிட்டூர் ராணி செல்லம்மா, கேலாடி சென்னம்மா, துர்காவதி, ஜான்சிராணி என வரலாறு நெடுக இன்னும் எத்தனையோ பெண் வீராங்கனைகளின் எண்ணிக்கை நீண்டு கொண்டே செல்கிறது. இவர்கள் பெண்கள் அதிலும் மீசையில்லாத பெண்கள், ஆனாலும் வரலாறு போற்றும் வீரம் இவர்களில் இருந்தது. அப்படியானால் வீரத்துக்கும் பாலினதிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை குறிப்பாக வீரத்துக்கும் மீசைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பது தெளிவாகிறது. ஆனாலும் ஏன் மீசை வீரத்தின் அடையாளமாகவும் உயரிய விஷயமாகவும் பார்க்கப்படுகிறது? உண்மையில் அது தைரியத்தின் அடையாளமாக பார்க்கப்படுவதால் சமூகத்தில் ஒரு அந்தஸ்த்தைப் பெற்றுள்ளதா? மீசைக்கும் சமூக அந்தஸ்திற்குமான தொடர்பிற்கு காரணம் என்ன? 1800 களில் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் ஈழவர், நாடார், சாம்பவர் போன்ற ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த ஆண்கள் மீசை வைத்துக் கொள்ள வரி விதிக்கப்பட்டிருந்தது. இது 1800 களில் தானே நடந்தது? இப்போது அப்படி எதுவும் இல்லையே என ஆசுவாசப்பட இயலாது, காரணம் 2017ஆம் ஆண்டு குஜராத் மாநிலம் காந்தி நகர் மாவட்டத்திலுள்ள லிம்போதரா கிராமத்தில், மீசை



(7ஆம் பக்கம் பார்க்க..)



# இஸ்ரேல் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 9 குழந்தைகள் பலி காசாவில் சோகம்

காசா மீது இஸ்ரேல் ராணுவம் நடத்திய தாக்குதலில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 10 குழந்தைகளில் 9 பேர் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேற்காசிய நாடான இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்தின் காசாவை ஆளும் ஹமாஸ் பயங்கரவாத அமைப்புக்கும் இடையே ஓராண்டுக்கு மேலாக மோதல் நீடித்த நிலையில், உலக நாடுகளின் தலையீட்டால் கடந்த ஜனவரியில் முதற்கட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

ஆறு வார கால போர் நிறுத்தத்தின் போது, இரு தரப்பிலும் பிணைக்கைதிகள் விடுவிக்கப்பட்டனர். இரண்டாம் கட்ட போர் நிறுத்த பேச்சின் போது, இஸ்ரேல் விதித்த நிபந்தனைகளை ஏற்க ஹமாஸ் தரப்பு மறுத்தது. இதையடுத்து, காசா மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த நிலையில், கடந்த 23ம் தேதி காசாவில் கான் யூனிஸ் நகரத்தின் மீது இஸ்ரேல் ராணுவம் வான்வெளி தாக்குதலை நடத்தியுள்ளது. இதில், ஏராளமானோர் கொல்லப்பட்ட நிலையில், ஹமாதி அல் நஜ்ஜர் என்ற டாக்டரின் 10 குழந்தைகளில் 9 பேர் உயிரிழந்திருப்பது தற்போது தெரிய வந்துள்ளது. இந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

உயிரிழந்த 9 குழந்தைகள் ஒருவயது முதல் 12 வயதுக்குட்பட்டவர்களாவர். இந்த தாக்குதலில் படுகாயமடைந்த நஜ்ஜரும், எஞ்சிய ஒரு குழந்தையும் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

நஜ்ஜரின் மனைவி ஆலாவும் ஒரு டாக்டர். இவர் இஸ்ரேல் - காசா போரில் படுகாயமடைந்த பாலஸ்தீனியர்களுக்கு சிகிச்சை அளித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உலக அழகி போட்டியில் வெளியேறிய பிரிட்டன் அழகி பரபரப்பு குற்றச்சாட்டு



'உலக அழகிப் போட்டியில் விருந்தினர்களை மகிழ்விப்பதற்காக அழகிகளை நடத்திய விதம், விபசாரியை போல உணர வைத்தது' என, போட்டியில் இருந்து வெளியேறிய பிரிட்டன் அழகி மில்லா மாகி ஆவேசமாக தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சி, 180 நாடுகளில் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட உள்ளது. போட்டியில் பங்கேற்க, பல்வேறு நாடுகளில் இருந்தும் அழகிகள் வந்துள்ளனர்.

பிரிட்டன் சார்பாக உலக அழகிப் போட்டியில் பங்கேற்க வந்திருந்த மில்லா மாகி, 24, தனிப்பட்ட காரணங்களால் போட்டியில் இருந்து வெளியேறுவதாக கடந்த 16ல் அறிவித்தார்.

உலக அழகிப் போட்டியின் 74 ஆண்டு வரலாற்றில், இதுபோன்று ஒரு போட்டியாளர், பாதியில் வெளியேறுவது இதுவே முதல் முறை.

மில்லா மாகி வெளியேறியதையடுத்து, 'மிஸ் இங்கிலாந்து 2024' போட்டியில் இரண்டாம் இடம் பிடித்த, சார்லோட் கிரான்ட், 25, பிரிட்டன் சார்பில், உலக அழகி போட்டியில் பங்கேற்பார் என அறிவிக்கப்பட்டது.

இந்த சூழலில், லண்டன் திரும்பிய மில்லா மாகி, அங்கு ஒரு பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், போட்டியில் இருந்து வெளியேறியதற்கு ஏராளமான காரணங்களை அடுக்கியுள்ளார்.

அவர் கூறியதாவது:

உலக அழகி போட்டிக்கு நிதி உதவி அளிக்கும் பெரும் பணக்காரர்களை வசீகரிக்கும் வகையில், காலையில் இருந்து இரவு வரை அதிக ஒப்பனை, கவர்ச்சியான ஆடைகளை அணிந்து இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டோம்.

ஆறு விருந்தினர்கள் அமர்ந்திருக்கும் ஒவ்வொரு மேஜையிலும் இரண்டு பெண்கள், கட்டாயமாக அமர வைக்கப்பட்டனர்.

அதை, என்னால் நம்ப முடியவில்லை அவர்களின் பொழுதுபோக்குக்காக நான் வரவில்லை. அவர்களின் செயல்கள் வாயிலாக, என்னை ஒரு விபசாரியைப் போல உணர வைத்தனர்.

அவர்களை மகிழ்விப்பதற்காக, வித்தைக்காட்டும் குரங்குகளைப் போல அமர்ந்திருந்தோம். என்னால், அதைத் தாங்க முடியவில்லை. இதெல்லாம் சிறிய நிகழ்வுகள் தான்.

உண்மையில் எங்களைப் பற்றி அவர்கள் என்ன நினைத்தனர் என்பது மரியாதைக் குறைவாக அவர்கள் நடந்துகொண்ட விதமே காட்டிக் கொடுத்தது.

உலக அழகி என்ற பட்டத்துக்கென தனி மதிப்பு இருக்க வேண்டும். ஆனால், அது இன்னும் பழைய காலத்திலேயே சிக்கிக் கிடக்கிறது.

உலகில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு உங்கள் குரலை பயன்படுத்தும்போது, உலகில் உள்ள அனைத்து கிரீடங்களும் ஒன்றுமே கிடையாது. எதிர்காலத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தவே, நான் வெளியேறினேன். இவ்வாறு அவர் கூறினார்.

# மியான்மரிலிருந்த தப்ப முயன்ற 427 ரோஹிங்கியா அகதிகள் பலி?



மியான்மரில், கடல் மார்க்கமாக இரு கப்பல்களில் தப்பிச்செல்ல முயன்ற ரோஹிங்கியா அகதிகள், 427 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என, ஐ.நா., சபை தெரிவித்துள்ளது.

மியான்மரில், 2017ம் ஆண்டு முதல் அந்நாட்டு ராணுவத்தால், அங்கு வசிக்கும் முஸ்லிம் சிறுபான்மையான ரோஹிங்கியா மக்கள் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். சிலர் கடல் மார்க்கமாக வேறு நாடுகளுக்கு தப்பி செல்கின்றனர்.


இந்நிலையில், மியான்மரில் இருந்து கடல் மார்க்கமாக வேறு நாடுகளுக்கு தப்பிச்செல்லும் நோக்கில் சமீபத்தில் இரு கப்பல்களில் ஏராளமான அகதிகள் சென்றனர். அந்த கப்பல்கள் இரண்டும் கடலில் மூழ்கியதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதுகுறித்து, ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஆணையர் வெளியிட்ட அறிக்கை:

மியான்மரில் இருந்து கடல் மார்க்கமாக தப்ப முயன்ற ரோஹிங்கியா அகதிகள் சென்ற இரண்டு கப்பல்கள் கடலில் மூழ்கின. இதில் கடந்த 9ம் தேதி 267 பேர் சென்ற கப்பலில், 66 பேர் மட்டுமே உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். இதேபோல் 10ம் தேதி, 247 பேருடன் சென்ற கப்பலில், 21 பேர் மட்டுமே உயிர் பிழைத்துள்ளனர்.

மீதமுள்ள 427 பேரின் நிலை பற்றி இதுவரை எந்த விபரமும் கிடைக்கவில்லை. இதுபற்றி ஐ.நா., குழு முதற்கட்ட விசாரணையை துவக்கியுள்ளது. அவர்கள் உயிரிழந்திருந்தால் இந்த ஆண்டின் மோசமான விபத்தாக இது கருதப்படும். இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# ரஷ்யா 'ட்ரோன்' தாக்குதல்: உக்ரைனில் 12 பேர் பலி



உக்ரைனில் தொடர்ந்து இரண்டாவது நாளாக, 'ட்ரோன்' எனப்படும் ஆளில்லா சிறிய விமானங்கள் மற்றும் ஏவுகணை வாயிலாக ரஷ்யா நடத்திய தாக்குதலில், 12 பேர் உயிரிழந்தனர். கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைனுக்கும், ரஷ்யாவுக்கும் இடையே மூன்று ஆண்டுகளாக மோதல் நடக்கிறது. இதில் இருதரப்பிலும் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

மோதலை நிறுத்தும்படி இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. சண்டையை நிறுத்துவது தொடர்பாக, உக்ரைன் - ரஷ்யா இடையே ஒருபக்கம் பேச்சு நடந்தாலும், மறுபக்கம் தாக்குதலும் தொடர்கிறது. இந்நிலையில், உக்ரைனில் உள்ள பல்வேறு நகரங்களை குறிவைத்து, தொடர்ந்து இரண்டாவது நாளாக, நேற்று முன்தினம் இரவும் ரஷ்ய படைகள் தாக்குதல் நடத்தின.

இந்த தாக்குதலுக்கு, 298 ட்ரோன்கள் மற்றும் 69 ஏவுகணைகள் பயன்படுத்தப்பட்டு உள்ளன. இதில், தலைநகர் கீவ் நகரில் நான்கு பேரும் சைட்டோமிர் நகரில் மூன்று சிறுவர்களும் மைக்கோலைவ் நகரில் ஒருவரும் உயிரிழந்தனர்.

மேலும், க்மெல்னிட்ஸ்கி நகரில் நடந்த தாக்குதலில், நான்கு பேர் உயிரிழந்தனர் 10க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். அவர்களுக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இது தவிர, இந்த நகரங்களில் உள்ள கட்டடங்கள், குடியிருப்புகளும் பலத்த சேதமடைந்தன. போர் துவங்கியதில் இருந்து, உக்ரைன் மீது ரஷ்யா நடத்திய மிகப்பெரிய ட்ரோன் மற்றும் ஏவுகணை தாக்குதல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே, ஏற்கனவே நடத்திய பேச்சின்படி, ரஷ்யாவும், உக்ரைனும் தங்கள் வசம் இருந்த கைதிகளை பரஸ்பரம் விடுவித்து வருகின்றன. (ஐ)

## மஹிந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உத்தர விட்டுள்ளது. விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மஹிந்தானந்த அளுத்கமகே சிறைச்சாலை அதிகாரிகளால் இன்று காலை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டில் விவசாய அமைச்சராக மஹிந்தானந்த அளுத்கமகே கடமையாற்றியபோது, தரமற்ற உரங்களை இறக்குமதி செய்வதற்காக சீன நிறுவனத்துக்குப் பணம் செலுத்தியமை தொடர்பில், அவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, மஹிந்தானந்த அளுத்கமகே கடந்த 19ஆம் திகதி கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜரானதைத் தொடர்ந்து, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், இன்று மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

## யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சர்மாவே (வயது 52) உயிரிழந்துள்ளார்.

இந்தியத் துணைத் தூதரக அதிகாரி தனது தனிப்பட்ட விஜயமாக வட இந்தியா இமயமலை சாரலுக்கு வழிபாட்டுக்காகச் சென்றுவிட்டு கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக நாடு திரும்பி யாழ்ப்பாணத்துக்குக் காரில் வந்து கொண்டிருந்த வேளை டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார்.

விபத்தின் போது காரைச் செலுத்தி வந்த யாழ். வடமராட்சி - நெல்லியடியைச் சேர்ந்த பிரபாகரன் சர்மா சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

அவரின் மனைவியான யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விரிவுரையாளர் பி.சீத்தாலட்சுமி (வயது - 50), மகன் பி.அக்ஸய் (வயது 27), மாமனார் சுவாமிநாதன் ஐயர் (வயது - 70) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பில் ஓமந்தைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மேர்வின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு மஹர நீதிவான் நீதிமன்றம் இன்று திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபர்கள் ஐவரும் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றுக்குப் போலி ஆவணங்களைத் தயாரித்து பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் மேர்வின் சில்வா மற்றும் பிரசன்ன ரணவீர ஆகியோர் கைது செய்யப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கூடிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்சிகளுக்கு மாநகர முதல்வர் மற்றும் தவிசாளர் தெரிவுகளில் தமிழ்த் தேசியப் பேரவை ஆதரவு வழங்கும்." - என்று தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

அதேபோன்று உள்ளூராட்சி மன்றங்களில் இரண்டாவது நிலையில் கூடிய ஆசனங்களைப் பெற்ற அல்லது சமமான ஆசனங்களைப் பெற்றிருப்பின் கூடுதல் வாக்குகளைப் பெற்ற தமிழ்த் தேசியக் கட்சிகளுக்குப் பிரதி முதல்வர் மற்றும் உப தவிசாளர் தெரிவுகளில் தமிழ்த் தேசியப் பேரவை ஆதரவு வழங்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் யாழ். கச்சேரி அருகாமையிலுள்ள வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவர்கள் மற்றும் தமிழ்த் தேசியப் பேரவையின் சார்பில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பெயரிலும் அதன் சைக்கிள் சின்னத்திலும் போட்டியிட்டு வெற்றி பெற்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சிக்குக் கிடைக்கப் பெற்ற மேலதிக ஆசனங்கள் மூலம் கட்சியினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் கூடிக் கலந்துரையாடி கொள்கை அடிப்படையில் ஒருமனதாக மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மக்களின் வெளிப்பாடு, சபைகளின் ஆட்சி நிர்வாகத்தை அமைப்பதில் மக்களின் தற்போதைய எதிர்பார்ப்பு என்பவற்றைக் கருத்தில்கொண்டு தமிழ்த் தேசியப் பேரவை இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

இந்தத் தீர்மானத்துக்கமைய பின்வரும் முடிவுகள் தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தால் அறிவிக்கப்பட்டன.

தீர்மானத்துக்கு அமைய எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு:-

மாநகர சபைகள் உட்பட தமிழர் தாயகத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு நடந்து முடிந்த தேர்தலில் கூடிய ஆசனங்களைப் பெற்ற அல்லது சமமான ஆசனங்களைப் பெற்ற சபைகளில் கூடுதல் வாக்குகளைப் பெற்ற தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு முதல்வர், தவிசாளர் தெரிவுகளில் ஆதரவு வழங்குவதுடன் அவ்வாறான சபைகளுக்கான முதல்வர், தவிசாளர் தெரிவுகளில் தமிழ்த் தேசியப் பேரவை போட்டியிடமாட்டாது.

அதேபோன்று தமிழ்த் தேசியப் பேரவை அதிகூடிய வாக்குகளைப் பெற்ற சபைகளில் தவிசாளர் தெரிவுக்குப் போட்டியிடும். அதன்போது மக்கள் தேர்தலில் வழங்கிய ஆணைக்கு மதிப்பளிக்கும் வகையில் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகள் ஆதரவு வழங்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையில் தமிழ்த் தேசியப் பேரவை இரண்டாவது நிலையில் இருக்கும் சபைகளில் துணை முதல்வர், உப தவிசாளர் பதவிகளுக்குப் போட்டியிடும்.

பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையில் இரண்டாவது நிலையில் இருக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு துணை முதல்வர், உப தவிசாளர் தெரிவுக்குத் தமிழ்த் தேசியப் பேரவை ஆதரவு வழங்கும்.

எந்தவொரு நிலையிலும் சிங்களப் பௌத்த பேரினவாதக் கட்சிகளுக்கும் அவற்றுக்கு ஆதரவான கட்சிகளுக்கும் இவ்வாறான பதவிகளுக்கான தெரிவுகளுக்கு ஆதரவு வழங்கப்படமாட்டாது.

இவற்றின் மூலம் உள்ளூராட்சி சபைகளின் ஆட்சி நிர்வாகத்தைத் தமிழ்த் தேசியக் கட்சிகளின் கைகளில் வைத்திருப்பதுடன் எதிர்காலத்தில் எவ்வித இடையூறுகளும் இல்லாது மக்களுக்கான பணிகளைச் சிறப்பாகச் செய்ய முடியும் என்று தமிழ்த் தேசியப் பேரவை எதிர்பார்ப்பதுடன் இதன் மூலம் கட்சிகளுக்கிடையே புரிந்துணர்வை வளர்க்க முடியும் என்றும் தமிழ்த் தேசியப் பேரவை நம்புகின்றது.

## கொழும்பு – காலி பிரதான வீதியில் இன்று அதிகாலை துப்பாக்கிச்சூடு!

கொழும்பு, மே 26

கொழும்பு - காலி பிரதான வீதியில் ரன்தொம்பே பிரதேசத்தில் உள்ள உணவகம் ஒன்றுக்கு முன்பாக துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது என்று அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இன்று திங்கட்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ரன்தொம்பே பிரதேசத்தில் உள்ள உணவகத்துக்கு முன்பாகச் சென்ற இனந்தெரியாத நபர்கள் சிலர் வானத்தை நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இதன்போது துப்பாக்கிதாரிகள், உணவக உரிமையாளரைத் தீவிரமாகக் கண்காணித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அம்பலாங்கொடை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மீசை: ஆதிக்கத்திகன்.....

)வைத்திருந்ததற்காக ராஜ்புத் ஜாதியைச் சேர்ந்த ஒருவரால் தலித் இளைஞர் ஒருவர் தாக்கப்பட்டார். அந்த நிகழ்வின் தொடர்ச்சியாக, தாக்குதலுக்கு உள்ளான இளைஞரின் சொந்தக்காரர் ஒருவரும் இதே போல தாக்குதலுக்கு உள்ளானார்.

இந்த கதை 2017இல்தான் கடைசியாக நடந்ததா எனக் கேட்டால், அதுவும் இல்லை. ஜெய்ப்பூரிலிருந்து 300 கிமீ மேற்கே, ராஜஸ்தானின் பாலி மாவட்டத்தின் பர்வா கிராமத்தை சேர்ந்த ஜிதேந்திர மேக்வால் என்ற தலித் இளைஞர் அரசு மருத்துவமனையில் ஒப்பந்தப் பணியாளராக பணிபுரிந்தவர். சூரஜ் சிங், கமலேஷ் சிங் மற்றும் சந்தன் சிங் ஆகிய சாதி இந்துக்களால் இவர் 2022 மார்ச் மாதம் 15ஆம் தேதி அன்று சரமாரியாகக் கத்தியால் குத்தப்பட்டு இறந்து போனார். கொலைக்கான காரணமாக இம்மூவரும் சொன்னது ஜிதேந்திர மேக்வால் மீசை வைத்திருந்தார் என்பதுதான்.

இதுபோல இன்னும் எத்தனையோ உதாரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். இங்கு மீசை என்பது சாதி ஆதிக்கம் மற்றும் சாதி கௌரவம் ஆகியவைகளின் அடையாளமாக பார்க்கப்படுகிறது என்பதை மேல்கண்ட சில நிகழ்வுகளில் இருந்து நம்மால் புரிந்து கொள்ள முடியும். அதாவது மீசை மேட்டிமைத்தனம் மற்றும் ஆதிக்கத்தின் குறியீடாக இருக்கிறது.

வரலாற்றில் ஆட்சி அதிகாரத்தில் இருந்தவர்கள் மீசை வைத்திருந்ததும், இன்று சமூக சாதிய அடுக்கில் ஒடுக்கப்பட்ட மக்கள் மீசை வைக்கக் கூடாது என சொல்வதற்கும் காரணம், தெரிந்தோ தெரியாமலோ, அதிகாரம் மிக்கவர்கள் மட்டுமே மீசை வைக்க தகுதியுடையவர்கள் எனும் கற்பிதம் மட்டுமே.

மீசை சாதிய ஆதிக்கத்தின் அடையாளம் மட்டுமா எனக் கேட்டால் இல்லை. “மீச வைச்ச ஆம்பள முன்னுக்கு பேசாத” என்பது போன்ற சொல்லாடல்களை கடந்து வராத பெண்கள் சொற்பமே. மீசை என்பது ஆண்மையின் அடையாளமாகவும் மேன்மையும் அடையாளமாகவும் பார்க்கப்படுவது தான் இதற்கு காரணம். முதலில் ஆண்மை என்றால் என்ன? என்ற கேள்வியே விடை தெரியாத பல நூற்றாண்டு கேள்வி. அப்படியிருக்க ஆண்மையின் அடையாளமாக மீசை பார்க்கப்படுவது, வேடிக்கையான ஒன்றுதான்.

மீசை வளராமல் இருப்பது சிலருக்கு இயற்கையான ஒன்று. ஆனால் மீசை ஆண்மையின் அடையாளமாகவும் மேன்மையின் அடையாளமாகவும் கற்பிக்கப்பட்டுள்ளதால், மீசை வளராத ஆண்களும் வளரிளம் பருவத்தில் உள்ள ஆண்களும் ஒரு வித தாழ்வு மனப்பான்மைக்கு ஆளாவதைப் பார்க்க முடிகிறது. இந்த சிந்தனைகளுக்கு எண்ணெய் ஊற்றுவது போல பல சமூக வலைதளங்களிலும் ‘மீசை வளர வேண்டுமா இதைச் செய்யுங்கள்’ என பல மருத்துவ குறிப்புகளும் அள்ளி தெளிக்கப் படுகின்றன. இதனாலேயே மீசை இல்லாதது ஏதோ உடல் குறைபாடுபோல நினைக்கின்றனர்.

இங்கு நாம் கவனிக்க வேண்டியது ஓர் ஆணின் முகத்தில் மீசை வளருவதில் ஹோர்மோன்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அது தவிர, மீசை மயிர்க்கால்களின் தன்மை, நாம் உட்கொள்ளும் உணவு என பல காரணிகளும் இதில் பங்கு கொள்கிறது. எனவே இந்த அனைத்து காரணிகளும் சரியாக உள்ள நிலையிலும் சிலருக்கு மீசை வளராமல் போனால் அது குறித்து கவலை கொள்ள தேவையில்லை என்பது தான் நாம் புரிந்து கொள்ள வேண்டியது. உடல் நலம் சார்ந்து சிந்திக்க வேண்டிய இடத்தில் தேவையற்ற சமூக கற்பிதங்கள் மூலம், வெறும் வெளித் தோற்றத்தில் மட்டுமே கவனம் செலுத்தும் அவலம் நடக்கிறது.

மீசை இல்லையென்றால் அவமானப்படுத்தப்படும் ஆண்கள் இருக்கும் இந்த சமூகத்தில், ஒரு பெண்ணுக்கு மீசை இருந்தால் அவளும் அதே அளவு அவமானத்திற்கும், கேலி கிண்டலுக்கும் உள்ளாகிறாள் என்பதை மறுக்க முடியாது. ஊஜனுஊஊஉளள (போலிசிஸ்டிக் ஓவரி டிசீஸ்ஃ போ லிசிஸ்டிக் ஓவரி சிண்ட்ரோம்) உள்ள பெண்களுக்கும் ஹோர்மோன் பிரச்சினைகள் உள்ள பெண்களுக்கும் முகத்தில் முடி வளருவது ஒரு அறிகுறி. அதற்கான சிகிச்சை எடுத்துக் கொண்டால் அது சரியாகும். ஆனால் சமூகத்தில் அப்பெண்கள் சந்திக்கும் ஏளனங்கள், அவர்களை அவர்களது உடல்நிலை பற்றி கவலைப்பட விடாமல், வெளித்தோற்றத்தை சரி செய்வதற்கு முன்னுரிமை அளிக்க வைக்கிறது. இப்படி மீசை என்பது ஆண்களையும் பெண்களையும் வெவ்வேறு கோணங்களில் துரத்தும் சமூக மதிப்பீட்டுக் காரணியாக உள்ளது.

ஓர் ஆணை அவமானப்படுத்த வேண்டுமெனில் “உனக்கெல்லாம் எதுக்கு மீசு?” என சொல்வதை நாம் கேட்டிருப்போம். அல்லது “மீசைய மழிச்சிட்டு போ” என வசை பாடுவதை கேட்டிருப்போம். அதாவது ஓர் ஆணை இழிவு செய்ய நினைப்பவர்கள் அந்த ஆணின் மீசையைக் குறிவைத்துப் பேசுவதுகூட, மீசை ஆணின் அடையாளம், அது ஆண்மையின் சின்னம் என சமூகத்தில் நிலவும் கற்பிதமே ஆகும்.

இது போன்ற கற்பிதங்கள் எந்த வித அடிப்படையான புரிதலும் இல்லாமல் ஒட்டுமொத்த ஆதிக்கத்தின் அடையாளமாக மட்டுமே கட்டமைக்கப்பட்டுள்ளன.

மீசை என்பது வெறும் மீசை மட்டுமல்ல, அது ஆதிக்கத்தின் ஒரு குறியீடு. அந்த ஆதிக்க குறியீடுகள் வரலாறு நெடுக பதித்த சுவடுகள் அழியாமல் இருந்து வருகிறது. அதன் தொடர்ச்சிதான் இன்றுவரை நம் சமூகத்திலும் திரைப்படங்களிலும் மீசையை முன்னிறுத்தி பேசப்படும்ஃஎழுதப்படும் வசனங்கள். இவை மாற வேண்டுமெனில் முதலில் மீசை என்பது மனிதனின் உடலில் வளரும் ரோமம்தான் என்பதையும், மீசைக்கும் ஒருவருடைய சுயமதிப்புக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதையும் உணருவது மட்டுமே.

இனி வரும் தலைமுறையினராவது இது போன்ற வெற்று பிம்பங்களில் சிக்காமல் இருப்பதற்கு நம்மால் செய்ய முடிவது ‘மீசை வெறும் மயிர்தான்’ என உரக்கச் சொல்வதே.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.05.2025 வெளியிடப்பெற்றது.